ஆண்டறிக்கை
2020

தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

பொருளடக்கம்

1. முன்னேற்ற அறிக்கை
2. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
3. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான விளக்க அறிக்கை
4. நிதி அறிக்கைகள்

முன்னேற்ற அறிக்கை - 2020

1.0 அறிமுகம்

1985 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் இலங்கையின் பொதுக் கல்வியின் அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்குப் பொறுப்பானதாகும். இவ்வாறு, தேசிய கல்வி நிறுவகம் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டும் கொள்கைகளை எளிதாக்குவதற்கும், அறிவியல் தகவல் தளத்தை நிறுவுவதற்கும், பாடசாலைக் கட்டமைப்பில் திறமையான நிபுணர்களின் வளர்ச்சிக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குவதற்கும், தேசிய மக்களை சந்திக்கும் வகையில் ஒரு அறிவியல் தகவல் தளம் நிறுவப்பட்டுள்ளதோடு உலகளாவிய தேவைகள், உற்பத்தித் திறன் கொண்ட பிரசைகளை உருவாக்குதல், கல்வியை உறுதி செய்வதற்குத் தேவையான சமூக-பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ற பாடத்திட்டங்களின் மூலம் தரமான கல்வியினை உறுதி செய்யும் பொறுப்பையும் ஏற்கின்றது.

நிறுவகமானது அச்செயற்பாடுகளை திட்டமிடும்போதும் நடைமுறைப்படுத்தும்போதும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் எட்டையும் (8) அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(அ) இலங்கையின் கல்வி அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கல்வி அமைச்சருக்கு தெளிவுப்படுத்தல்.

(ஆ) கல்வியின் விசேடத்துவமான அம்சங்கள் தொடர்பில் - பட்டப்பின் கல்வியை வழங்குவதை முன்னேற்றுதல்.

(இ) கல்வியில் - இலக்கு, கட்டமைப்பு, உள்ளடக்கம் அடங்கலாக கல்வித் துறையின் செயற்பாடுகளையும், கல்விக்குரிய சமூக - பொருளாதார மற்றும் கல்வியின் பிற அம்சங்கள் உட்பட, ஆய்வுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்னேற்றுதல்.

(ஈ) கல்வி இலக்குகளை அடைந்துக்கொள்வதற்காக தொழில்நுட்பத்தை உபயோகப்-படுத்தல் உட்பட, கல்வி முறையில் புதுமையான நடைமுறைகளை ஆரம்பித்தல் மற்றும் அனுசரணை வழங்குதல்.

(உ) கல்வி அமைப்பில் பணிபுரிபவர்களின் வாண்மைத்தின் மற்றும் நிர்வாகத் திறனை அபிவிருத்தி செய்தல்.

(ஊ) அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நிபுணத்துவ கல்வி சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

(எ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துதல்.

(ஏ) ஒத்த நோக்கங்களைக் கொண்ட நிறுவனங்களுடன் உறவுகளைப் பேணுதல்.

இலங்கையின் பாடத்திட்டக் கொள்கையின்படி ஒவ்வொரு எட்டு வருடங்களுக்கும் பாடத்திட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, அதன்படி அடுத்த திருத்தம் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும். ஆகவே, தேசிய கல்வி நிறுவகத்தின் பங்கானது 21 ஆம் நூற்றாண்டு மற்றும் நான்காம் கைத்தொழில் புரட்சிக்கு ஏற்றவாறு முழுப் பாடத்திட்டத்தையும் ஆராய்ச்சிக்கு ஏற்ப மிகப்பொருத்தமான முறையில் திருத்துவதன் மூலம் பாடத்திட்டத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுதல்.

மேலும், தேசிய கல்வி நிறுவகம், 13 வருட பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்யும் மாணவரிடம் இருக்க வேண்டிய பண்புகளை தேசிய குறிக்கோள்களாக அடையாளம்

கண்டுள்ளது. அதாவது தேசிய அபிவிருத்திக்கு செயலூக்கத்துடன் பங்குபற்றல், பலன்மிக்கதும் மற்றும் செயற்றிறன்மிக்க சேவையாளராதல் அல்லது சுயதொழிலில் ஈடுபடல், முயற்சியாண்மைக்குரிய மனோத்திடத்துடன் காணப்படல், தேசாபிமானமிக்கவராக இருத்தல் சிறந்த நபராதல் மற்றும் மகிழ்ச்சியான குடும்பத்தின் உறுப்பினராக இருத்தல் என்பனவாகும்.

1.1 நிதியினைப் பெற்றுக்கொள்ளல்

கல்வி மேம்பாட்டுத் துறைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகளின் நிதியம் போன்றவற்றின் நிதியுதவிகள் ஆரம்பத்தில் பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் போன்றவற்றுக்கான ஒதுக்கீடுகள் மூலம் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டது. இதற்கும் மேலாக தொழில் விருத்திப் பாடநெறிகளை நடாத்துதல், ஊதியம் மற்றும் வேறு கொடுப்பனவுகள் செலுத்தல், நாளாந்த பராமரிப்பு செயற்பாடுகள் மற்றும் பயன்பாட்டு பற்றுசீட்டுக்கள், அரச அனுசரணை மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் வருமானங்கள் மூலம் (கொடுப்பனவுகள்) மேற்கொள்ளப்பட்டன. புதிய கட்டட நிர்மாணம், இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான செலவுகள், அரசாங்க மானியங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்திலிருந்து ஈட்டப்பட்ட வருமானங்கள் மூலம் (நிதித் தேவைகள்) வழங்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் ஒதுக்கீடுகள் மற்றும் செலவுகள் பற்றிய தகவல்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

நிதி மூலம்	மீண்டெழும் செலவு (ரூ)		மூலதனச் செலவு (ரூ)	
	உத்தேசிக்கப் பட்ட ஒதுக்கீடு	உண்மைச் செலவு	ஒதுக்கீடு	உண்மைச் செலவு
அரச நிதி	525,000,000	494,000,000	115,000,000	115,000,000
GEMP	220,151,000	111,000,000	23,500,000	18,933,292
தேசிய கல்வி நிறுவகத்தின் வருமானம்	217,527,500	145,745,822	337,500,000	143,865,770
UNICEF	1,476,000	2,910,835		
UNESCO (KNLU/APEIU)	9,311,000	3,874,609		

1.2 பணிக்கமர்த்தல்

மேற்கூறிய நோக்கங்களை அடைவதற்காக, 450 இற்கும் மேற்பட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் பணியாளர்கள், விடயம் சார்ந்து ஐந்து பீடங்களுக்கும் ஒரு பிரிவுக்கும் உரித்தாகும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தற்போதுள்ள பணியாளர் நிலைமைகளை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது. புதிய பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் தேசிய கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவமானது 2021 ஜூலை இறுதியாகும்போது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.


2020 ஆம் ஆண்டின் இறுதியில் நிறுவகத்தின் பணிக்குழாம் பற்றிய தெளிவான விளக்கத்தினை கீழே உள்ள அட்டவணை காட்டுகின்றது.

பெயர்	அனுமதிக்கப்பட்ட சேவையாளர் எண்ணிக்கை 2020.01.01	தற்போதுள்ள சேவையாளர் எண்ணிக்கை			வெற்றிடங்களின் எண்ணிக்கை 2020.08.31
		ஆண்	பெண்	மொத்தம்	
பணிப்பாளர் நாயகம்	01	01	-	01	-
மேலதிக பணிப்பாளர் நாயகம்	01	0	0	0	01
பிரதி பணிப்பாளர் நாயகம்	06	01	0	01	05
பணிப்பாளர்	27	10	08	18	09
பேரவை செயலாளர் (கல்வி)	01	0	0	0	01
சிரேஷ்ட விரிவுரையாளர் / சிரேஷ்ட கல்வியலாளர்	72	29	37	66	06
விரிவுரையாளர் / கல்வியலாளர்	75	05	05	10	65
உதவி விரிவுரையாளர் / உதவி கல்வியலாளர்	90	35	45	80	10
கல்விசாரா ஊழியர்கள்	379	134	168	302	77
மொத்தம்	652	215	263	478	174

2020 ஆம் ஆண்டளவில் பணியாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பலமுறை முயற்சித்த போதிலும், 65 விரிவுரையாளர் பதவிகள் உட்பட 97 கல்விப் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது கல்விசார் ஊழியர்களின் தகைமை நிலை கீழே உள்ள வரைபடத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

தகைமைகள் அடிப்படையிலான வகைப்படுத்தல்



2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன கட்டமைப்பு

நிறுவனக் குழுவின் நிறுவனக் கட்டமைப்பின் உயர் பீடமாக பணிப்பாளர் சபை, கல்விசார் பணியாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரைக் கொண்டதாகும்.

2.1 பேரவை - 2020

பேரவை நிறுவகத்தினை நிர்வகிப்பதில் மிக உயர்ந்த இடத்தினை வகிக்கின்றது. 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகங்கள் சட்டத்தின் ஆறாம் பிரிவின் விதிகளின்படி, நிறுவன செயற்பாடுகளின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் ஏனைய செயற்பாடுகளைத் தீர்மானிப்பது பேரவை ஆகும். அச்சட்டத்தின் 7ஆம் பிரிவில் அதன் உறுப்பினர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்வரும் நபர்கள் 2020 ஆம் ஆண்டில் பேரவையின் உறுப்பினர்களாக பணியாற்றியுள்ளனர்.

திரு. என். எச். எம். சித்ராநந்த - தலைவர்
(செயலாளர், கல்வி அமைச்சு) (2020 ஆகஸ்ட் 26 வரை)

பேராசிரியர் கபில பெரேரா - தலைவர்
(செயலாளர், கல்வி அமைச்சு) (2020 ஆகஸ்ட் 27இல் இருந்து)

கலாநிதி டீ. ஏ. ஆர். ஜே. குணசேகர - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்) (2020 மார்ச் 16 வரை)

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்) (2020 மார்ச் 19 இல் இருந்து)

கலாநிதி உபாலி சேதர - உறுப்பினர்
(அரச செயலாளர் - கல்வி அமைச்சு) (2020 பெப்ரவரி 10 இல் இருந்து)

பேராசிரியர் நாரத வர்ணசூரிய - உறுப்பினர்
(முன்னாள் துணைவேந்தர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

கலாநிதி. பி. விஜயரத்ன - உறுப்பினர்
(முன்னாள் செயலாளர் - விவசாய அமைச்சு) (2020 பெப்ரவரி 10 இல் இருந்து)

பேராசிரியர். எம். எஸ். எம். அனேஸ் - உறுப்பினர்
(ஓய்வுநிலைப் பேராசிரியர் கட்புலத் திணைக்களம் - பேராதெனிய பல்கலைக்கழகம்)

பேராசிரியர். எச். அபேகுணவர்தன - உறுப்பினர்
(தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு)

கலாநிதி. ஐ. எல். கினிஹே - உறுப்பினர்
(முன்னாள் உதவி பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்)
(2020 ஜூலை 15 வரை)

திரு. அனுர திஸாநாயக்க - உறுப்பினர்
(மேலதிகச் செயலாளர் - உயர் கல்வி அமைச்சு) (2020 ஜூலை 30 இல் இருந்து)

திரு. டீ. பி. எம். அத்தபத்து - உறுப்பினர்
(உதவிச் செயலாளர் - நிருவாகம் மற்றும் நிதி) – உயர் கல்வி அமைச்சு)
(2020 அக்டோபர் 7 இல் இருந்து)

திருமதி. அஜிதா பட்டகொட - உறுப்பினர்
(பணிப்பாளர் - (தேசிய வரவு செலவு), நிதி அமைச்சு)

திரு. எம். பீ. சி. எம். முத்துகுமாரண - உறுப்பினர்
(சிரேஷ்ட சட்டத்தரணி)

திருமதி. டப்ள்யு. எல். பீ. சி. சேனாநாயக்க
(செயலாளர் - ஒப்பந்த அடிப்படை)

2.2 கல்வி விவகார சபை

திரு. என். எச். எம். சித்ராநந்த - தலைவர்
(செயலாளர், கல்வி அமைச்சு (2020 ஆகஸ்ட் 26 வரை)

பேராசிரியர் கபில பெரேரா - தலைவர்
(செயலாளர், கல்வி அமைச்சு) (2020 ஆகஸ்ட் 27 இல் இருந்து)

கலாநிதி டீ. ஏ. ஆர். ஜே. குணசேகர - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்) (2020 மார்ச் 16 வரை)

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்) (2020 மார்ச் 19 இல் இருந்து)

கலாநிதி உபாலி சேதர - உறுப்பினர்
(அரச செயலாளர் - கல்வி அமைச்சு) (2020 பெப்ரவரி 10 இல் இருந்து)

பேராசிரியர் நாரத வர்ணசூரிய - உறுப்பினர்
(முன்னாள் துணைவேந்தர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

கலாநிதி. பி. விஜயரத்ன - உறுப்பினர்
(முன்னாள் செயலாளர் - விவசாய அமைச்சு) (2020 பெப்ரவரி 10 இல் இருந்து)

பேராசிரியர். எம். எஸ். எம். அனேஸ் - உறுப்பினர்
(ஓய்வுநிலைப் பேராசிரியர் கட்புலத் திணைக்களம் - பேராதெனிய பல்கலைக்கழகம்)

பேராசிரியர். எச். அபேகுணவர்தன - உறுப்பினர்
(தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு)

கலாநிதி. ஐ. எல். கினிஹே - உறுப்பினர்
(முன்னாள் உதவி பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்)
(2020 ஜூலை 15 வரை)

திரு. அனுர திஸாநாயக்க - உறுப்பினர்
(மேலதிகச் செயலாளர் - உயர் கல்வி அமைச்சு) (2020 ஜூலை 30 இல் இருந்து)

திரு. டீ. பி. எம். அத்தபத்து - உறுப்பினர்
(உதவிச் செயலாளர் - நிருவாகம் மற்றும் நிதி) – உயர் கல்வி அமைச்சு)
(2020 அக்டோபர் 7 இல் இருந்து)

திருமதி. அஜிதா பட்டகொட - உறுப்பினர்
(பணிப்பாளர் - (தேசிய வரவு செலவு), நிதி அமைச்சு)

திரு. எம். பீ. சி. எம். முத்துகுமாரண - உறுப்பினர்
(சிரேஷ்ட சட்டத்தரணி)

திருமதி. டப்ள்யு. எல். பீ. சி. சேனாநாயக்க
(செயலாளர் - ஒப்பந்த அடிப்படை)

2.2 நிருவாகக் குழுவுக்கு மேலதிகமாக, கல்வி முகாமைத்துவ நிருவாகம் மற்றும் ஏனைய தொடர்புடைய துறைகளில் நிபுணர்களைக் கொண்ட கல்வி விவகாரங்களுக்கான சபை, நிறுவகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானதாகும். தேசிய கல்வி நிறுவக சட்டத்தின் 11ஆம் பிரிவில் கல்விசார் சபையின் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில், பின்வரும் கல்வி நிபுணர்களை உள்ளடக்கிய கல்வி விவகார சபையின் உறுப்பினர்கள்

பேராசிரியர். சுதந்த லியனனே - தலைவர்
(சேவைக்கால துணைவேந்தர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்)

பேராசிரியர். உசைன் இஸ்மாஹில் - உறுப்பினர்
(முன்னாள் துணைவேந்தர், தென்கிழக்கு பல்கலைக்கழகம்)

கலாநிதி. எஸ். ராஜதுரை - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்)

கலாநிதி. பிரியந்த பிரேமகுமார - உறுப்பினர்
(செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

கலாநிதி. லக்ஸ்மன் பீ. வெடிக்காரகே - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்)

திரு. பி. டி.சி. பியன்வில - உறுப்பினர்
(பிரதான ஆணையாளர், ஆசிரியர் கல்வி, கல்வி அமைச்சு) (2020 மே 17 வரை)

திரு. ஈ. எம். எஸ். ஏக்கநாயக்க - உறுப்பினர்
(பிரதான ஆணையாளர், ஆசிரியர் கல்வி, கல்வி அமைச்சு)
(2020 மே 18 இலிருந்து)

திரு. டப்ள்யு. எம். ஜே. விக்கிரமநாயக்க - உறுப்பினர்
(ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு)
(2020 ஜூலை 29 வரை)

திரு. பீ. என். இலப்பெரும - உறுப்பினர்
(ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு)
(2020 ஜூலை 30 இலிருந்து)

திரு பி. சனத் பூஜித - உறுப்பினர்
(ஆணையாளர் நாயகம், பரீட்சைகள் திணைக்களம்)

கலாநிதி. எஸ். ஏ. டி. சமரவீர - உறுப்பினர்
(சேவைக்கால உதவி பணிப்பாளர் நாயகம் - மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்)

திரு. கே. ரஞ்சித் பத்மசிறி - உறுப்பினர்
(சேவைக்கால உதவி பணிப்பாளர் நாயகம் - விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பீடம்)

திரு. என். வீ. ஏ. எஸ். சமரசிங்ஹ - உறுப்பினர்
(சேவைக்கால உதவி பணிப்பாளர் நாயகம் - ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்விப் பீடம்)

திரு. டி. ஏ. ஜயலால் - உறுப்பினர்
(சேவைக்கால உதவி பணிப்பாளர் நாயகம் - கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்)

கலாநிதி. வீ. டி. சி. பீ. பெரேரா - உறுப்பினர்
(சேவைக்கால உதவி பணிப்பாளர் நாயகம் - ஆய்வுகள், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பீடம்)

திருமதி. டி. எல். பீ. சி. சேனாநாயக்க
(செயலாளர் - ஒப்பந்த அடிப்படை)

தேசிய கல்வி நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்ட பணிகள் பின்வரும் நிறுவன கட்டமைப்பின் கீழ் நிருவாக சபை மற்றும் கல்விசார் பணியாளர்கள் சபையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

2.3 பணிப்பாளர் நாயகத்தின் செயலகம்

பணிப்பாளர் நாயகத்தின் செயலகம் பின்வரும் அலகுகளைக் கொண்டுள்ளது.

- பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்
- உள்ளக கணக்காய்வு பிரிவு
- பரீட்சைகள் துறை

செயலகப் பிரிவானது தேசியக் கல்வி நிறுவகத்தின் நிர்வாகக் குழுவுக்கும், கல்விசார் பணிக்குழுவிற்கும் தேவையான ஆவணங்களை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்கும், நிருவாக சபை மற்றும் கல்விக் குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் பீடங்கள் மற்றும் துறைகளுக்கு தெளிவூட்டும் பொறுப்பினையும் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டில் நிருவாக சபை கூட்டங்கள் 10 உம், கல்விசார் குழுவின் கூட்டங்கள் 09 உம் மேற்படி இரு குழுக்களும் சேர்ந்து இரண்டு கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

பரீட்சைகள் துறையானது தரநிலைகளைப் பேணுவதோடு வினைத்திறன்மிக்கதும் மற்றும் திறமையானதுமான பரீட்சை முறையை வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. தேசிய கல்வி நிறுவகத்தின் தொழில் விருத்தி பாடநெறிகளை நடாத்த வேண்டியுள்ளதால் சான்றுபடுத்தும் தேவைகளுக்கு அப்பால் பயன்மிக்கதும் வினைத்திறன்மிக்கதுமான பரீட்சை நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றது. 2020

ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது.

- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா – 2019 - முழு நேரம்
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா – 2018 / 2019 குறுங்காலம்
- பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா – 2019 / 2020 (முதலாம் தவணை / பருவம்)
- கல்வி முகாமைத்துவ டிப்ளோமா – 2020 / 2021 (அனுமதிப் பரீட்சை)
- மேலதிக மொழி விருத்தி டிப்ளோமா – 2019
- கல்விமாணி – 2017 / 2021 – முதலாம் பகுதி (விசேடம்)
- பிறைல் கல்வி தொடர்பான சான்றிதழ் - 2019
- கல்விமாணி – 2017 / 2021 (விசேடம்)
- ஆலோசனை தொடர்பான டிப்ளோமா – 2018 / 2019
- ஆரம்பப் பிள்ளைப் பருவம் – 2019 / 2020

உள்ளக கணக்காய்வுப் பிரிவு நேரடியாக நிறுவகத்தின் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றது.

அமைப்பின் உள்ளக நிருவாகக் கட்டமைப்பு

இப்பிரிவின் மூலம், நிறுவகத்தின் உள்ளக நிருவாக கட்டமைப்பு முறையைச் செயற்படுத்துவதைக் கண்காணிக்கின்றது. இது தொடர்பில் 2020ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ.75,000 இற்கு மேல் செலுத்தப்பட்ட 38 கோப்புகளின் சரிபிழை பார்க்கப்பட்டு கணக்காய்வு அறிக்கைகள் 23 இனை உள்ளக கணக்காய்வு பிரிவு தயாரித்துள்ளது.

2.4 2020 மறுசீரமைக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பின்படி நிறுவனத்தின் பல்வேறு துறைகள் மற்றும் அலகுகள் செயற்படுத்தப்படும் விதம் பின்வருமாறு

மொழியியல், மனிதநேயம் மற்றும் சமூகவியல் பீடம்

- ஆரம்பப் பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வி துறை
- சிங்கள மொழிகள் துறை
- தமிழ் மொழிகள் துறை
- ஆங்கில மொழிகள் துறை
- அழகியல் துறை
- மதங்கள் மற்றும் ஒழுக்கவியல் துறை
- சமூகவியல் துறை
- பாரம்பரிய மொழிகள் / வெளிநாட்டு மொழிகள் / இருமொழிக் கல்வித் துறை
- பிரிவேனா பிரிவு
- பாடசாலை மட்ட மதிப்பீட்டு அலகு

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடம்

- விஞ்ஞான துறை
- கணிதத் துறை
- தொழில்நுட்பக் கல்வித் துறை
- வணிகத் துறை
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு விளம்பரத் துறை
- சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பிரிவு

ஆய்வு திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பீடம்

- திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுத் துறை
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி துறை
- வெளிநாட்டு பாடநெறிகள் அலகு

கல்வி தலைமைத்துவ மேம்பாடு மற்றும் முகாமைத்துவ பீடம்

- தொழில் விருத்தி மற்றும் முகாமைத்துவ துறை
- கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி
- வெளிநாட்டு பாடநெறிப் பிரிவு

ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்வி பீடம்

- ஆசிரியர் கல்வித் துறை
- நிறுவன அபிவிருத்தித் துறை
- உள்ளடங்கல் கல்வித் துறை
- நூலகம் மற்றும் அருங்காட்சியகத் துறை
- வழிகாட்டல் மற்றும் ஆலொசனைப் பிரிவு
- திறந்த பாடசாலை அலகு

நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள் பிரிவு

- நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் துறை
- நிதித்துறை
- பொறியியல் சேவைகள் மற்றும் பராமரிப்பு துறை
- அச்சு மற்றும் பதிப்பகத் துறை
- போக்குவரத்து அலகு

2020 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்

நிறுவனங்களின் வருடாந்த செயற்றிட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்ட விருத்தி, தொழில்துறை விருத்தி, கல்வி ஆய்வு போன்றவற்றுடன், 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்றிட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம் 2020 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள பணிகள்.

- கலாநிதி சுனில் ஜயரத்ன அவர்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நியமிக்கப்பட்டார். முகாமைத்துவ நிபுணராக தனது நற்பெயரைக் கொண்ட கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, தனது பல வருட தலைமைத்துவத்தின் அனுபவச் செல்வத்தை தன்னுடன் கொண்டு வந்திருந்தார். மேலும் தேசிய கல்வி நிறுவகத்தில் இப்பதவியினை வகிப்பதற்கு முன்னர் உயர் கல்வி அமைச்சின் செயலாளராகவும், சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் ஆலோசகராகவும் செயற்பட்டுள்ளார். அதற்கு முன்னர் 1996 இலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவராகவும் செயற்பட்ட காலத்தில் "தருண சக்தி' என்ற முதலாவது நேரடி தொலைக்காட்சி வேலைத்திட்டம் உட்பட பல புதுமையானதும், உறுதிப்படுத்தப்பட்டதுமான வேலைத்திட்டங்களை இந்நாட்டின் திறமைமிக்க இளைஞர்களுக்காக வழங்குவதற்கான தலைமைத்துவத்தினை வழங்கியிருந்தார்.

- தேசிய கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவ செயற்பாட்டுத் மூலோபாயத் திட்டம் 2021 - 2025 தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தேசிய கல்வி நிறுவகம் தேசிய கல்விப் பல்கலைகழகமாக மாறுவதற்கான முக்கிய பணியினை ஆற்றி வருகின்றது. இந்த மூலோபாய திட்டத்தின் மூலம் தேசிய கல்வி நிறுவகத்திற்குத் தற்போது காணப்படும் இயலுமையை மேம்படுத்தி சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் முன்னுரிமையைப் பெற்றுக்கொடுக்கின்றமை.

- தேசிய கல்வி நிறுவகத்தின் மாணவர்களுக்கு நான்காம் கைத்தொழில் புரட்சிக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் 21ஆம் நூற்றாண்டு திறன்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தமது முதலீடு மற்றும் கல்விக் கட்டமைப்பினை 2021 - 2025 காலத்தினுள் இத்திறன்களுடன் ஒழுங்குபடுத்தியுள்ளது. 2021 - 2025 மூலோபாய திட்டம் தேசிய கல்வி நிறுவகத்தின் புதிய பணிப்பாளர் நாயகமான கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் நடைபெறுகின்றது.

- ஒரே பாடத்தொகுதியின் கீழ், முன்பள்ளி முதல் மூன்றாம் நிலைக் கல்வி மட்டம் வரையில் அனைத்து மாணவர்களையும் வலுவூட்டுவதற்காக, தரமான கல்வியினை வழங்கும் நோக்கத்துடன் தேசிய கல்வி நிறுவகம், சமமான கல்விக்காக, தேசிய பாடத்தொகுதி கட்டமைப்பு, திட்டமிடல் மற்றும் கட்டியெழுப்பல் பணியினை நிறைவு செய்துள்ளது. இது தொடர்பில் தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய வெளியீட்டு திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. கல்வி மறுசீரமைப்பு கௌரவ அமைச்சர், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் 2020இற்கு அப்பால் பரிந்துரைக்கப்பட்ட பாடத்திட்ட மறுசீரமைப்புகளுக்கு ஏற்ற தேசிய பாடத்தொகுதி கட்டமைப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கற்றல்பேறு வேலைத்திட்டம் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கங்களை அறிந்து கொள்ளும் செயற்பாடுகளை தேசிய கல்வி நிறுவகத்தின் கட்டளைச் சட்டத்தின் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- கொவிட் 19 தொற்று உலகம் முழுவதும் பரவியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அரசும் கொவிட் 19 தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கும், இல்லாதொழிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கும் சில முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. அதன் ஒரு செயற்பாடாக 'சமூக இடைவெளி' உள்ளடங்கல் செயற்பாடொன்றாக பாடசாலையை துரிதமாக மூடியமையைக் குறிப்பிடலாம். அதன் விளைவாக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் பிற அதிகாரிகள் இணைந்து 5, 11 மற்றும் 12, 13 தரங்களுக்கான பாடங்கள் உருவாக்கப்பட்டு பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வருட இறுதியாகும் போது தேசிய கல்வி நிறுவகம், உயர்தரத்திற்காக தொலைபக்காட்சிப் பாடங்கள் 2,140 உம் தரம் 11 இற்கு தொலைக்காட்சி பாடங்கள் 1,596 உம் தரம் ஐந்திற்காக (குருகுலம்) தொலைகாட்சி பாடங்கள் 280 உம் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- கடந்த டிசம்பர் மாதம் 20ஆவது தேசிய பிரதேச கற்றல் உதவி மத்திய நிலையத்தின் மாநாடு ஐந்து நாடுகளின் பங்குபற்றலுடன் 600 பங்குபற்றுநர்களுக்காக மொழி மதிப்பீடுகள் 2020 தொடர்பாக ஏழாவது சம்மேளனம் நடைபெற்றது.

3.0 பாடத்திட்ட அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகத்தின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாக பொதுக் கல்விக்கான பாடத்திட்டங்களை வடிவமைத்து மேம்படுத்துவது காணப்படுகின்றது. பாடத்திட்ட அபிவிருத்தி செயற்பாடு தேசிய கல்வி நிறுவகத்தின் மொழிகள், மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்கள் மற்றும் தொழில்நுட்ப பீடத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் பாடத்திட்ட மேம்பாடு தொடர்பாக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.1 ஆரம்பக் கல்வி

முன்பள்ளிகளுக்கான தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின் 60% இனை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

3.2 இடைநிலைக் கல்வி

- எதிர்கால பொதுக் கல்விப் பாடத்திட்டத்தின் திருத்தத்திற்கான திருப்புமுனைகளை அடையாளம் காணவும் மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்காக பிரதேச ரீதியான உதவியைப் பெறவும் இலங்கைக்கான தேசிய மட்டத்திலான பொதுக் கல்விக்கான பாடத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.
- தரம் 6 - 11 இற்கான உலகளாவிய குடியுரிமைக் கல்வி மேம்பாட்டுக்கான பாடத்திட்டத்தின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
- தரம் 12 - 13 இற்கான தொடர்பாடலும் ஊடகக் கல்விகான இரண்டு ஆசிரியர் வழிகாட்டிகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- தரம் 9 இற்கான இரண்டாம் தேசிய மொழிக்கான (தமிழ்) செயல்நூலின் இறுதி வரைவு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.
- பாடசாலை பாடத்திட்டத்தில் பிரயோகக் கணிதம் எனும் எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்காக தரம் 10 இற்கான வரைவாக்கற் பணி, தரம் 6 இற்கான செயற்பாடுகள் 15 இனை திருத்தல் செயற்பாடு நிறைவடைந்துள்ளது.

- தரம் 6 – 12 இற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் தரத்தை மேம்படுத்துவதற்காக பொதுக் கல்வியினை நவீனமயமாக்கல் (GEMP) திட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் முப்பத்துமூன்று (33) பேரை பயிற்றுவித்தல் மற்றும் ஆசிரியர் பயிற்சி தேவைகள் பற்றிய பகுப்பாய்வு என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- வணிகக் கல்வி தொடர்புடைய சொற்களை அறிந்து கொள்ளவும், கற்றல் - கற்பித்தலில் ஈடுபடவும் மாணவர்களுக்கு உதவும் வகையில் வணிகக் கல்விக்குரிய ஆங்கில - சிங்கள அகராதியின் இறுதி வரைவு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- 'ஆயதஹம்' நவராத்திரி இதழ் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேம்படுத்துவதற்காக தரம் 6 – 13 இற்கான கல்வி மென்பொருள் 10 உருவாக்கப்பட்டுள்ளன.

- வருடாந்த பிராந்திய ஆங்கில உதவு மையங்களின் மாநாடு நிகழ்நிலையில் நடாத்தப்பட்டது.

- இரண்டு மாகாணங்களில் தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் பாடத்துக்காக வலய மட்டத்தில் ஆசிரியர் வளவாளர் குழாத்தினரை உருவாக்குவதற்காக வளவாளர்களை அடையாளம் காணும் பணி நிறைவடைந்துள்ளது.

- பிரிவேனா கல்வியின் 406 பாட பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களுக்கான திறன் விருத்திக்கான நிகழ்நிலை திறன் மேம்பாட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- மதிப்பீட்டு முறையின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட பாடத்திட்ட கற்றற் பேறுகளைப் பெற்றுக்கொள்ளவும் மாணவர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காகவும் தேசிய கல்வி நிறுவகத்தின் 180 அதிகாரிகளுக்கு மதிப்பீடு தொடர்பான செயலமர்வினை நடாத்தியமை.

- இருமொழிக் கல்வி தொடர்பான தேசிய மாநாட்டிற்காக கட்டுரை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, என்பதோடு மாநாட்டுடன் தொடர்புடைய இரு கட்டுரைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இருமொழிக் கல்விக்கான முதலாம் கட்ட ஆய்வு முன்மொழிவின் இரண்டாம் வரைவு உருவாக்கப்பட்டுள்ளதோடு ஆவணமாக்கப்பட வேண்டிய பத்து அத்தியாயங்களில் முதல் ஆறு அத்தியாயங்களுக்கான வரைவு உருவாக்கப்பட்டுள்ளது.

- உத்தரவாதமளிக்கப்பட்ட 13 ஆண்டு கல்வித் திட்டத்தை செயற்படுத்துவது குறித்த ஆய்வு நிறைவடைந்துள்ளது.

4.0 கல்வி தலைமைத்துவ வளர்ச்சி மற்றும் முகாமைத்துவம்

தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் முக்கிய பங்கு கல்வித் துறையில் ஈடுபடுபவர்களின் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ திறனைத் தூண்டுவதாகும்.

மேற்குறிப்பிட்ட பணிகளை ஆற்றும் வகையில், கல்வி முகாமைத்துவம், பாடசாலை நிர்வாகம் போன்றவற்றில் டிப்ளோமா முதல் முதுமானி கல்வி வரையிலான பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் பீடத்தினால் நடத்தப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் கல்வித் தலைமைத்துவ விருத்தி மற்றும் முகாமைத்துவத்தால் செயற்படுத்தப்பட்ட பாட நெறிகளின் விபரம் பின்வருமாறு.

பாடநெறியின் பெயர்	பொறுப்புடைய துறை	பங்குபற்றுவோர் தொகை
பட்டப்பின் பட்டப்படிப்பு கல்வி முகாமைத்துவவியல்	தொழில் அபிவிருத்தி கல்வி	34
பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (முழுநேரம் / பகுதிநேரம்)	தொழில் அபிவிருத்தி கல்வி	343
டிப்ளோமா பாடநெறி பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா	தொழில் அபிவிருத்தி கல்வி	268

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு மேலதிகமாக சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலமான கல்வி முகாமைத்துவ பட்டப்படிப்பு பாடநெறி வழிகாட்டிகள் 90% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

5.0 தொழில்முறை விருத்தி

பல்வேறு நவீன ஆசிரியர் கல்வி மாதிரிகளை பயன்படுத்துவது. பாரிய ஆசிரியர் பணியாளர்களின் தொழில்முறை விருத்தி தேவைகளை வழங்குதல் தொடர்பில் நீண்ட மற்றும் குறிப்பிடத்தக்க வரலாறொன்று தேசிய கல்வி நிறுவகத்திற்குக் காணப்படுகின்றது. எந்தவொரு பாடநெறியினதும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைந்து கொள்வதற்கு அல்லது கட்டமைப்பினால் அறிமுகப்படுத்திய பயன்மிகு சேவையாளர்களாக மாறுவதற்குத் தேவையான தெளிவு, திறன்கள் மற்றும் தன்னம்பிக்கையினை வழங்கும் நோக்கில் உயர் தரத்திலான பாடநெறிகளை வழங்கி இப்பணியினை மேற்கொள்கின்றது. இதற்காக சான்றிதழ் மட்டம் தொடங்கி முதுமாணி வரையில் பல்வேறு ஆசிரியர் கல்வி பாடநெறிகள் குறித்த ஆசிரியர் கல்வித் துறையினாலும் பாடத்திட்ட அபிவிருத்தித் துறையினாலும் நடாத்தப்படுகின்றன.

மொழிகள் மற்றும் மனிதநேய பீடம் மற்றும் ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்வி பீடத்தின் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் பாடநெறிகளின் முன்னேற்றம் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

பாடநெறியின் பெயர்	பொறுப்புடைய துறை	பங்கு பற்றுவோர்
பட்டப்பின் படிப்பு பாடநெறி		
தத்துவமாணி	ஆசிரியர் கல்வித் துறை	52
கல்வியியல் முதுமாணி	ஆசிரியர் கல்வித் துறை	257
பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி		
பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா	ஆசிரியர் கல்வித் துறை	3,216

பாடநெறியின் பெயர்	பொறுப்புடைய துறை	பங்கு பற்றுவோர்
பட்டப்படிப்புகள்		
கல்விமாணி (விசேடம்)	ஆசிரியர் கல்வித் துறை	713
கல்விமாணி (பொது)	ஆசிரியர் கல்வித் துறை	3,210
கல்விமாணி (பொறியியல்)	ஆசிரியர் கல்வித் துறை	120
டிப்ளோமா பாடநெறி		
இரண்டாம் மொழி ஒன்றை கற்கும் டிப்ளோமா	ஆங்கில மொழித்துறை	15
முன்பிள்ளைப்பருவம் மற்றும் ஆரம்பக் கல்வி தொடர்பான டிப்ளோமா	முன் பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வித்துறை	49
விசேடக் கல்வி தொடர்பான டிப்ளோமா	உள்ளடக்கல் கல்வித்துறை	91
சமிக்ஞை மொழி தொடர்பான டிப்ளோமா	உள்ளடக்கல் கல்வித்துறை	30
ஆலோசனை மற்றும் வழிகாட்டல் தொடர்பான டிப்ளோமா	ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பிரிவு	129
மேலதிக மொழி விருத்தி தொடர்பான டிப்ளோமா	ஆசிரியர் கல்வித் துறை	225
குறுங்காலப் பாடநெறி		
கணிதத்தைக் கற்பிப்பதற்கான உயர் சான்றிதழ் பாடநெறி	கணிதத்துறை	89
கல்வி ஆய்வு முறைகள் தொடர்பான பாடநெறி	ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை	34

2020 ஆம் ஆண்டில் தேசிய கல்வியியற் கல்லூரிகளால் (NCOE) நடத்தப்படும் முன் சேவைக்கால ஆசிரியர் கல்வித் திட்டங்களுக்கும் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (TTC) நடத்தும் சேவைக்கால ஆசிரியர் பயிற்சிக் கல்வித் திட்டங்களுக்கும் உரிய பாடத்திட்டங்களை உருவாக்குவதற்குமான பொறுப்பு தேசிய கல்வி நிறுவகத்திடம் காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு இது தொடர்பில் தலையீடுகள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- ஆலோசனைக் குழுவின் முடிவுகளின்படி, தேசிய கல்வியியற் கல்லூரிகளின் கல்வி இளங்கலைமானி பாடநெறிக்காக 56 பாடநெறிகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- 15 வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு தேசிய கல்வியியற் கல்லூரிகளின் இரண்டு உள்ளகப் பரீட்சைகளில் ஒன்று நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- முன் சேவைக்கால கல்வி குறித்த ஆசிரியர் கல்வியாளர்களின் குடியுரிமைத் தேர்ச்சிகளை வலுப்படுத்த 600 மொடியூல்களை அச்சிடும் பணிகள் நடைபெறுகின்றன. இவர்கள் கற்றல் பயிற்சிகளை கண்காணிப்பதற்காக மூன்று முறை கல்வி நிறுவனங்களுக்குச் சென்று 10 செயற்பாடுகளைத் தயாரித்துள்ளனர்.

6.0 மாற்றுக் கல்வி

மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதுடன், ஆசிரியர் கல்வி பீடம், மாற்றுக் கல்விப் பீடம் என்பன விசேடக் காரணங்களால் பிரதான கல்விவாய்ப்புகளை இழந்துள்ளவர்களுக்காக கற்றல் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது. 'வாழ்நாள் நீடித்த கல்வி' போன்ற எண்ணக்கருக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகள் என்பன ஆலோசனைப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது.

6.1 உள்ளடக்கல் கல்வி

அனைவருக்கும் கல்வி என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவதில் உள்ளடக்கல் கல்வித் துறை முக்கிய பங்காற்றுகிறது. இத்துறை விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஏற்ற வகையிலான பாடசாலை பாடத்திட்டத்தை வடிவமைத்தல், விசேட தேவை துறையில் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கும் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களுக்கும் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல், மேலதிக பாடத்திட்ட விடயங்களை தயாரித்தல் போன்ற பொறுப்புகளை ஏற்கின்றது. மேலும் அவர்களுக்கு சைகை மொழிகள், பிரெயில் கல்வி, உள்ளடக்கக் கல்வி தொடர்பான பாடநெறிகளை வழங்குதல் மற்றும் தொழில் விருத்தி என்பவற்றையும் பெற்றுக்கொடுக்கின்றது.

- மொழி, கணிதம், சூழல் சார் செயற்பாடுகள் உள்ளடங்களாக ஆசிரியர் வழிகாட்டிக்கு இணங்க 20 சிங்களப் பாடங்கள் மற்றும் 10 சம்பவக் கற்றைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- உள்ளடக்கக் கல்வி பற்றிய இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

- விசேட தேவையுடைய 21 மாணவர்கள் இனங்காணப்பட்டு அந்த மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.

- தற்போது அங்கவீனமுடைய (உடல் இயக்கம் மற்றும் பார்வை) நிலைமைகளுக்காக மேலதிக கற்றல் சாதனங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- ஆட்டிசம் உள்ள பிள்ளைகளுக்காக தமிழ் மொழியில் மேலதிக நூல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

6.2 வழிகாட்டல் மற்றும் ஆலோசனை

மேற்குறிப்பிடப்பட்ட சமூக மற்றும் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைப் பிரிவொன்று ஜூன் 2006 இல் நிறுவப்பட்டது. பாடசாலை தரப்பினருக்காகவும், தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல் இப்பிரிவின் பொறுப்பாகும். 2020 ஆம் ஆண்டில் கீழுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- 55 பாடசாலைப் பிள்ளைகளகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு நிறுவனம் சாரா ஆலோசனை அமர்வுகள் நடத்தப்பட்டன.

- தொழில் வழிகாட்டலுக்காக சிங்கள மொழிமூலமான ஆசிரியர் வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது

- உத்தேசிக்கப்பட்ட தொழில் வழிகாட்டல் டிப்ளோமா பாடநெறிக்கான பாடத்திட்ட வரைவு நிறைவு செய்யப்பட்டு, மொடியூலின் உள்ளடக்கம் வரைவு செய்யப்பட்டுள்ளது

- ஆலோசனை டிப்ளோமாவிற்குரிய பாடத்தின் மூன்றில் இரண்டு பகுதி சாராம்சப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

6.3 திறந்த கல்வி

பல்வேறு காரணங்களால் முறையான கல்வியை கைவிட்ட குழுக்களுக்கு தொலைதூர மற்றும் திறந்த கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் திறந்த பாடசாலை அலகு நிறுவப்பட்டது. தொலைதூர மற்றும் திறந்த முறைகளைக் கையாண்டு இக்கல்வி கற்போருக்கு கற்பித்தல் நடைபெறுகின்றது. கல்வித் தகைமை, தொழில், சமூக, கலாசார நிலை எதுவாயினும் இச்செயன்முறையின் மூலம் அனைத்து நபர்களுக்கும் கல்வி வாய்ப்பினை விரிவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. திறந்த பாடசாலையில் கற்போருக்கு, கற்றலை ஆரம்பிக்கும் நேரம், பயன்படுத்தும் முறை என்பன எளிதாக்கப்பட்டுள்ளதோடு பொருத்தமான எந்தவொரு படிமுறையின் கீழும் கற்றலை ஆரம்பிக்க உதவி வழங்கப்படுகின்றது.

திறந்த கல்வி திட்டம் தொடர்பான பின்வரும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- கணிதம் மற்றும் விஞ்ஞானம் கற்போருக்காக இரு மேலதிக நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

- நாட்டில் கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக ஆரம்பிக்க தாமதமான எட்டு கற்கை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நடைமுறையிலுள்ள மத்திய நிலையங்களை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் பிரதேச மத்திய நிலையங்களை உருவாக்குதல் தொடர்பான ஆய்வு நிறைவு செய்யப்பட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

- 24 பிரதேச கற்றல் மையங்களில் கற்பவர்களுக்கு உதவுவதற்காக 24 கற்றல் அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளது.

- முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் இரண்டு நடத்தப்பட்டுள்ளதோடு இரு கற்றல் மத்திய நிலையங்கள் (தனிப்பட்ட) மேற்பார்வையிடப்பட்டுள்ளது.

- 87 பயனாளிகள் திறந்த அடிப்படைப் பாடநெறியையும், 94 பயனாளிகள் எழுத்தறிவு பாடநெறியையும், 823 பயனாளிகள் திறந்த இடைநிலைப் பாடநெறியையும் நிறைவு செய்துள்ளனர்.

- 2020 ஆம் ஆண்டில், அடிப்படைப் பாடநெறிக்கு 145 பயனாளிகளும், இடைநிலைப் பாடநெறிக்கு 950 பயனாளிகளும், எழுத்தறிவு பாடநெறிக்கு 105 பயனாளிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

6.4 கல்வி அருங்காட்சியகம்

இலங்கையின் கல்வியின் வரலாற்றைப் பாதுகாப்பதற்கான பிரதான மையம் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி அருங்காட்சியகமாகும். இதில் இலங்கையின் கல்வி தொடர்பான தகவல்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் சேகரிக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சில முக்கிய சேகரிப்புகளுள் கலாநிதி சி. டப்ள்யூ.

டப்ள்யூ. கன்னங்கர அவர்களின் கைக்கடிகாரம், தேசிய உடை, கையெழுத்து மாதிரி என்பனவும் இதில் அடங்கும். மேலும் இதில் இலங்கையின் பொதுக் கல்விக்குரிய கல்வி சுற்றறிக்கைகள், கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் பழைமையான எழுது கருவிகளும் அடங்கும்.

- அறிவையும் பொழுதுபோக்கையும் வழங்குவதற்காக ஒரு கண்காட்சிப் பொருள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- இலங்கையின் கல்வி வரலாறு பற்றிய தெளிவுக்கான விளம்பரப் பலகைகள் இரண்டு மற்றும் சிறு நூல் ஒன்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

6.5 நூலகம்

தேசிய கல்வி நிறுவகத்தின் உள்ளக ஊழியர்களுக்கு மேலாக, பல்கலைக்கழக பணியாளர் குழு, தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிற கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களால் இந்நூலகம் பயன்படுத்தப்படுகின்றது.

பின்வரும் புத்தகங்கள் மற்றும் இறுவட்டுக்கள் (CD) 2020 ஆம் ஆண்டிற்கான நூலகப் பொருட்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

புத்தகங்கள்	-	1,311
தேசிய கல்வி நிறுவக வெளியீடுகள்	-	129
பாடத்திட்ட உபகரணங்கள்	-	53
புத்தகங்கள் (நன்கொடைகள்)	-	05
இறுவட்டுக்கள் (CD)	-	32
வெளிநாட்டு இதழ்கள்	-	06
தேசிய இதழ்கள் (நன்கொடைகள்)	-	20
வெளிநாட்டு சஞ்சிகைகள் (நன்கொடைகள்)	-	15
செய்தி மடல்கள்	-	05
கல்வி அறிக்கைகள்	-	04

7.0 ஆய்வு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

கல்வித் துறை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது, மூலோபாய முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் வருடாந்த முகாமைத்துவத் திட்டங்களை வகுத்தல், பௌதிக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் மீள உருவாக்குதல் மற்றும் அனைத்து நிதிச் செலவினங்களையும் சேர்த்து மதிப்பீடு செய்தல் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் பணியாளர்களுக்கான தொழில் விருத்தியினை மேம்படுத்தல் ஆகியவை இப்பீடத்தின் முக்கியப் பொறுப்புகளாகும். இச்செயற்பாடுகள் ஆய்வு அபிவிருத்தி, அபிவிருத்தித் துறை மற்றும் வெளிநாட்டு வள முகாமைத்துவப் பிரிவு என்பவற்றினால் நிறைவு செய்யப்படுகின்றது.

7.1 ஆய்வு மற்றும் அபிவிருத்தி

ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையின் முக்கிய செயற்பாடுகளாக, கல்வி ஆய்வுகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல், விரிவுபடுத்துதல், உரையாடல் மற்றும் விவாதிக்க வேண்டிய கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு தளத்தை உருவாக்குதல், கல்வித் துறையில் உள்ளவர்கள் தங்களின் ஆய்வுத் திறன்களை

மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குதல். பாடநெறிகளை நடாத்துதல், மானியங்களை வழங்குவதன் மூலம் கல்வித்துறையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பு வழங்குதல் மற்றும் ஆய்வுத் தகவல்களை பரப்புரை செய்தல் என்பன காணப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் பின்வருமாறு:

- Dr. C.W.W. கன்னங்கரா நினைவு பேரூரை – 2020 ஆண்டு மூன்று மொழிகளில் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) அச்சிடப்பட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்ட COVID - 19 தொற்றுநோய் காரணமாக விரிவுரையை நடத்துவது ஒத்திவைக்கப்பட்டது.
- ஆய்வு சஞ்சிகையின் மாதிரி அமைப்பு (Dummy) தயாரிக்கப்பட்டு அச்சிடுவதற்கு ஒப்படைக்கப்பட்டமை.
- 55 பங்கேற்பாளர்களுக்கான ஆய்வு கருத்தரங்கினை நிகழ்நிலையில் நடாத்தியமை.
- ஆய்வு வெளியீடுகளின் மீளாய்வு மற்றும் சேமிப்புகளுக்கான தரவுத்தளத்தை உருவாக்கியமை.
- கீழுள்ள தலைப்புகளின் கீழ் ஆய்வாளர்கள் நால்வருக்கு (04) முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் இரண்டு (02) நடாத்தியமை. இரண்டாண்டுகளுக்கான ஆய்வு மானியத்திற்கான வரைவு அறிக்கை பெற்றுக்கொண்டமை.
    - ✓ யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள இடைநிலைப் பாடசாலை மாணவர்களிடையே உளவியல் ரீதியான தூண்டல்களை ஏற்படுத்தக் கூடிய உபகரணப் பயன்பாடு மற்றும் ஆபத்துக்களை குறைத்துக்கொள்வதற்கான தலையீடுகள் பற்றிய செயற்றிறன்.
    - ✓ இலங்கை கல்வியில் உத்தேசிக்கப்பட்டுள்ள (STEM) கல்வியை நடைமுறைப்படுத்தும் கற்றல் - கற்பித்தல் நவீனமயமாக்கலின் எண்ணக்கரு சட்டகத்தை அமுல்படுத்தியமை.
    - ✓ இலங்கையில் உள்ள பாடசாலைகளுக்கு வளங்களைப் பகிர்ந்தளித்தல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டமை.
    - ✓ இலங்கையில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பயிற்சித் திட்டங்களுக்குரிய கற்றல் - கற்பித்ததல் செயன்முறையில் ஆசிரியர் பயிலுநர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டமை.
- இலங்கையின் தற்போதைய கல்வி நடைமுறைகள் குறித்து பங்குதாரர்களிடையே ஒரு மன்றத்தை ஆரம்பிப்பதற்கான செய்தி மடலின் மின்-பதிப்பு பூர்த்தி செய்யப்பட்டு NIE அலுவலக இணைய தளத்தில் பதிவேற்றப்பட்டமை.

7.2 திட்டமிடல் மற்றும் மதிப்பீடு

தேசிய நோக்கங்களுக்கு ஏற்ப காணப்படும் மனித வளங்கள் மற்றும் பௌதிக வளங்களை பயன்மிக்க வகையிலும் மற்றும் திறமையான முறையில் பயன்படுத்தி தேசிய கல்வி நிறுவகத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை அடைந்து

கொள்வதற்காக திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டின் கீழ் பின்வரும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- வருடாந்த முன்னேற்ற அறிக்கையினை (ஆங்கிலம்) தயாரித்தமை - 2019
- மூலோபாய முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டமை - 2021 - 2025
- வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டமை, திணைக்களங்களின் வருடாந்த பாதீடு மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான நடைமுறைப்படுத்தப்படும் திட்டம் ஆகியவை தயாரிக்கப்பட்டமை.
- திருத்தப்பட்ட வருடாந்த பாதீட்டு திட்டம் மற்றும் 2020 இற்கான பாதீடு என்பன தயாரிக்கப்பட்டமை.
- 2020 ஆம் ஆண்டில் தேசிய மற்றும் வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்குரிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் நான்கினைத் (04) தயாரித்தமை.
- ஏனைய நிறுவனங்களால் கோரப்படும் கீழ்வரும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தமை:
  - மத்திய வங்கிக்கான 02 முன்னேற்ற அறிக்கைகள்
  - திரைசேரிக்கான 04 முன்னேற்ற அறிக்கைகள்
  - வெளிநாட்டு நிதியுதவியுடன் நடைபெறும் UNICEF பொது கல்வி நவீனமயப்படுத்தல் (GEMP) செயற்றிட்டத்திற்கான காலாண்டு அறிக்கை.

7.3 வெளிநாட்டு வள முகாமைத்துவ அலகு

அனைத்து வெளிநாட்டு உதவித்தொகைகள் மற்றும் பாரிய உதவித் தொகைகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு வெளிநாட்டு வள முகாமைத்துவ அலகிற்குரியதாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் (05), தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி பணியாளர்களுக்கு தமது தொழில் தகைமைகளை விருத்தி செய்துகொள்வதற்காக நீண்ட கால மற்றும் குறுங்கால திட்டங்கள் பலவற்றை வழங்கியுள்ளது.

2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு:

- பொதுக் கல்வியினை நவீனமயப்படுத்தல் (GEMP) திட்டத்தின் கீழ் முதுகலை பட்டப்படிப்புக்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் சேகரிக்கப்பட்டமை.
- ஆரம்ப பிள்ளைப் பருவத்தினருக்கான இலத்திரனியல் கற்றல் திட்டத்தினை ஏற்பாடு செய்தமை.

8.0 நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்

நிறுவனத்தின் பீடங்கள் ஐந்தினதும் (05) செயற்பாட்டிற்குத் தேவையான நிதி, பௌதிக மற்றும் முகாமைத்துவ சேவைகளை வழங்குவதே நிர்வாக, நிதி மற்றும் உதவிச் சேவைகள் பிரிவின் செயற்பாடாகும்.

8.1 நிர்வாகம் மற்றும் மனித வளத்துறை

நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள் பிரிவின் கீழுள்ள நிர்வாகத் துறை, மனித வளத்துறை, நாளாந்த நிர்வாகம், பணியாளர்களின் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து, தேசிய மட்டத்தில் தேவையான பயிற்சிகளை வழங்குதல் தொடர்பான

அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்பானது. 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் பின்வரும் ஆட்சேர்புகள் மற்றும் பதவி உயர்வுகளை மேற்கொண்டுள்ளது.

ஆட்சேர்ப்பு

உதவி விரிவுரையாளர்கள்	- 02
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	- 01

பதவி உயர்வுகள்

பணிப்பாளர்கள்	- 01
போக்குவரத்து உத்தியோகத்தர்	- 01
பரீட்சை உத்தியோகத்தர்	- 01
முகாமைத்துவ உதவியாளர் தரம் - I	- 10
முகாமைத்துவ உதவியாளர் தரம் - II	- 07
அலுவலக உதவியாளர் தரம் - I	- 04
அலுவலக உதவியாளர் தரம் - II	- 04

- கோரிக்கை விடுக்கும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்குபற்றுவதற்காக, கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்கள் முந்நூற்று தொண்ணூற்றிரண்டு (392) பேருக்கு கல்வி விடுமுறை மற்றும் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

8.2 நிதித்துறை

நிதித் துறையானது நிறுவனத்தின் அனைத்துப் பணிகளுக்கும் நிதி ஆதாரங்களை வழங்குகிறது மற்றும் நிதி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளைப் பராமரிக்கிறது.

- நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 95% தயார் செய்து நிறைவு செய்யப்பட்டமை.
- 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பு பணியினை நிறைவு செய்தமை.
- 2019 வருடத்திற்கான கணக்காய்வாளர் நாயகத்திற்கு இறுதி நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டமை.
- பயன்படுத்த முடியாத பொருட்களை அகற்றும் நடைமுறை தொடர்பான செயற்பாடுகள் 90% நிறைவு செய்யப்பட்டமை.
- விலைமனுக் கோரல் சபைக்குரிய பணிகளில் 90% நிறைவு செய்யப்பட்டமை.
- மூலதன பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் வாங்குவதற்கான செயற்பாடுகளில் 50% நிறைவு செய்யப்பட்டமை.

8.3 பொறியியல் சேவைகள் மற்றும் பராமரிப்பு துறை

பொறியியல் சேவைகள் மற்றும் பராமரிப்பு துறையானது கல்விச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பௌதிக சூழலைப் பேணல், நிறுவனத்தின் கட்டடங்களின் கட்டுமானம்

மற்றும் பராமரிப்பு, மின் மற்றும் தொலைபேசி சேவைகளைப் பராமரித்தல், துப்புரவு செய்தல், பாதுகாப்பு சேவை மற்றும் தொடர்புகளைப் பேணல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்க பொறுப்பாகவுள்ளது.

பொறியியல் சேவைகள் துறையானது 2020 ஆம் ஆண்டு தொடர்பான பின்வரும் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளது.

- மீப்பே வளாகத்தில் உள்ள விடுதியின் 70% ஆன கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- மகரகமவில் தேசிய கல்வி நிறுவகத்தின் பணியாளர்களுக்கான விடுதிக் கட்டடத்தின் 70% ஆன கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- தேசிய கல்வி நிறுவகத்தில் உள்ள ஐந்து மாடி கட்டட வளாகத்தின் கேட்போர் கூடத்தின் 80% ஆன சிவில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- கட்டட மற்றும் கட்டமைப்பு செயற்பாடுகளுடன் தொடர்புடைய மறுசீரமைப்பு பணிகள் 23 இல் 20 நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு 02 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

8.5 அச்சுப்பதிப்பு மற்றும் வெளியீடுகள்

நிறுவனத்தின் பின்வரும் வெளியீடுகள் 2020 இல் அச்சு மற்றும் வெளியீடுகள் துறையால் அச்சிடப்பட்டுள்ளன.

- ஆசிரியர் வழிகாட்டிகள் - 06
- வள நூல்கள் - 46
- சான்றிதழ்கள் - 15
- கோப்புகள் - 01
- ஏனையவை - 46

மேற்கூறியவை தவிர, புத்தகக் கண்காட்சி ஒன்றில் பங்கேற்றதோடு, பாடத்திட்ட அபிவிருத்தி தொடர்பான தேசிய கல்வி நிறுவகத்தின் வெளியீடுகள் மற்றும் ஆவணங்களை வெளியிடும் வாய்ப்பினையும் பெற்றுக்கொண்டது.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்

தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018, எண் 19, உபபிரிவு 12 இன் படி, டிசம்பர் 31, 2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான, தேசிய கல்வி நிறுவகத்தின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நிதிநிலை அறிக்கைகள்

1.1 தகுதிவாய்ந்த அறிக்கை

டிசம்பர் 31, 2020 அன்று முடிவடையும் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவகத்தின் நிதி நிலை குறித்த அறிக்கை, அன்று முடிவடையும் ஆண்டின் நிதி செயலாற்றுகை குறித்த அறிக்கை, நிகர சொத்துகளின் மாற்றம் குறித்த அறிக்கை, அறிக்கை தொடர்பான குறிப்புகள் அந்த நாளில் முடிவடையும் ஆண்டிற்கான பணப்புழக்கம் மற்றும் டிசம்பர் 31, 2020 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதி அறிக்கை, குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் தொகுப்பு ஆதியன இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) வது பிரிவுக்கு இணங்க வாசிக்கப்பட வேண்டியுள்ளதுடன், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி தேசிய கணக்காய்வு சட்டம் 19 ஆகியவை எனது வழிகாட்டுதலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154 (6) வது பிரிவின்படி எனது அறிக்கை உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
எனது தகுதிவாய்ந்த கருத்தைக் கொண்ட அறிக்கையின் அடிப்படையில் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள உண்மைகளின் விளைவைத் தவிர, டிசம்பர் 31, 2019 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதி செயலாற்றுகை மற்றும் பணப்புழக்கம் ஆகியவை அந்த நாளில் முடிவடையும் ஆண்டு இலங்கை பொதுத்துறையின் கணக்கியல் தரங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கின்றன என நான் கருதுகிறேன்.

1.1 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

(a) இலங்கை அரச துறை கணக்கியல் தரநிலைகள் எண் 7, சரத்து 54க்கு முரணாக, 2018 டிசம்பர் 31 அன்று நடைபெற்ற சொத்து மறு கணக்கீட்டில், ரூ. 443.2 மில்லியன் மற்றும் ரூ.20.6 மில்லியன் கணினி உதிரிப் பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் வரிசையிலான இழப்பு ஏனைய சொத்துகளின் 4 உட்பிரிவுகளின் மீள்கணக்கெடுப்பிலே அதிகப்படியானதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மீண்டும் கணக்கீடு செய்த மிகை மற்றும் திரண்ட நிதி 64.8 மில்லியன் ரூபா குறைவாகக் காட்டப்பட்டுள்ளதுடன் நிதிநிலை அறிக்கையில் அதே வரிசையில் அத்தொகை கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது .

(b) தணக்காய்விற்கு உட்பட்ட நிறுவனத்தால் நடத்தப்பட்ட பதினாறு பாடநெறிகளில் இரண்டில் அடையாளம் காணப்பட்டதன் விளைவாக, ரூ. 3.3 மில்லியன் பாடநெறிக் கட்டணமானது பரிசீலனையில் உள்ள

ஆண்டிற்குப் பெறப்பட்டப் பாடநெறிக் கட்டணமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டிற்கான பாடநெறிக் கட்டணத்தின் வருமானம் மற்றும் அடுத்த ஆண்டுக்கான பாடநெறிக் கட்டணங்களின் வருமானம் ஆகியவை நிதிநிலை அறிக்கையில் முறையே அந்தத் தொகையில் அதிகமாகவும், நிதிக் கூற்றில் அந்தத் தொகை குறைவாகவும் காட்டப்பட்டுள்ளன.

(c) 15.1 மில்லியன ரூபா, பணப்புழக்கமல்லாத சொத்துக்களின் மறுகணக்கீட்டை விட அதிகமாகவும், திரட்டப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்பட்ட 7.2 மில்லியன் ரூபாயும் முறையே பண உட்பாய்ச்சல் மற்றும் பண வெளிப்பாய்ச்சல் எனவும் நிதிநிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

(d) ஒப்பந்த முறிகளை மீறும் அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கை அடையாளம் காணப்படாத நிலையில், மீளாய்வாண்டின் தொடக்கத்தில் கண்டறியப்பட்ட ஒப்பந்த முறிகளின் மீறலில் இருந்த 7.2 மில்லியன் ரூபா திரட்டப்பட்ட நிதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

நான் இலங்கை கணக்காய்வுப் பிரமாணங்களின்படி கணக்காய்வை நடத்தி வருகிறேன். எதிர்காலத்தில் கணக்காய்வுப் பிரமாணங்களின் கீழ்வரும் எனது பொறுப்பு இந்த அறிக்கையில் வரும் கணக்காய்வாளரின் பொறுப்புப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது. நிதி கணக்காய்வு அறிக்கையுடன் தொடர்புபட்ட திரட்டப்பட்ட பொறுப்பின் கீழ்:

1.3 நிறுவகத்தின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட வேறு தகவல்கள் - 2020

வேறு தகவல்கள் என்பதனாற் கருதப்படுவது, கணக்காய்வு அறிக்கையின் தேதிக்குப் பிறகு, நிறுவனத்தின் 2020 ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்ட ஆனால் நிதிநிலை அறிக்கை மற்றும் எனது கணக்காய்வு அறிக்கை ஆகியவற்றில் சேர்க்கப்படாதவையாகும். இவ் வேறு தகவல்களுக்கு நிருவாகமே பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எனது கருத்து மற்ற தகவல்களை வெளிப்படுத்தவில்லை என்றாலும், இந்த விஷயத்தைப் பற்றி நான் எந்த கருத்தையும் தெரிவிக்க மாட்டேன் அல்லது அதைப் பற்றி எந்த விதமான உத்தரவாதமும் கொடுக்க மாட்டேன்.

